புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
Peer-Reviewed
ISSN : 2456-821X
UGC CARE LIST
UGC Care Listed Journal (2023 onwards)
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/03 - March 2023

===========================================================================

**தாயுமானவரின் சைவசித்தாந்த ஏற்பும் உலகாயத மறுப்பும்**

===========================================================================

**ஆய்வாளர்**
**திருமதி மா.மஞ்சுளா**
*தமிழ்த்துறை,*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்*
*கோயம்புத்தூர்- 43.*

**நெறியாளர்**
**முனைவர் க.கலாவதி**
*தமிழ்த்துறைத் தலைவர் (ஓய்வு)*
*தமிழ்த்துறை*
*அவினாசிலிங்கம் மனையியல் மற்றும் மகளிர் உயர்கல்வி நிறுவனம்,*
*கோயம்புத்தூர்- 43*

===========================================================================

**ஆய்வு நோக்கம்**

*உயிர்களின் குறிக்கோள் முக்தி இன்பத்தைப் பெறுவதாகும். வீடுபேற்றினைப் பற்றி சாங்கியம், உலகாயதம், சமணம், பௌத்தம், சைவசித்தாந்தம் போன்ற மதங்கள் தத்தமது கொள்கைகளைத் தனித்தனியே வரையறை செய்கின்றன. இறைவனை ஏற்றும் மறுத்தும் ஒவ்வொரு மதமும் சொற்போரின் மூலம் தங்களது எண்ணக் குமுறல்களைக் கொண்டுத் தீர்க்கின்றன. மனிதன் என்ற நிலையிலிருந்து இறை என்ற நிலைக்கு உயர்ந்த தாயுமானவப் பெருந்தகையார் தன் வாழ்க்கையில் சைவசித்தாந்த மதத்தினைப் போற்றிப் பின்பற்றுவதற்கான சாத்தியக் கூறுகளையும் உலகாயத மதத்தினை மறுப்பதற்கானக் காரணங்கள் குறித்தும் இவரது பாடல்கள் வழி ஆய்வதாக இக்கட்டுரை அமைகின்றது.*

**முன்னுரை**

வேதங்களை ஏற்கும் கொள்கையினர் மற்றும் வேதங்களை மறுக்கும் கொள்கையினர் என்றதன் அடிப்படையில் தத்துவப் பள்ளிகள் இனங்காணப்படுகின்றன. அவ்வகையில் சாங்கியம், யோகம், நியாயம், வைவேடிகம், பூர்வமீமாம்சம், உத்ரமீமாம்சம் போன்றவை வேதங்களை ஏற்கும் பள்ளிகளாகும். இதற்கு **வைதீகத் தத்துவங்கள்** என்று பெயர். உலகாயதம், ஆசீவகம் சமணம், பௌத்தம் போன்ற வேதத்தினை ஏற்காத பள்ளிகளை **அவைதீகத் தத்துவங்கள்** என்று பெயர். இவற்றில் சைவசித்தாந்தமானது வேத்தையும் ஆகமத்தையும் ஏற்றுக் கொண்ட வைதீக சமயமாகும். வேதம் வழிப்படுதலை வைதீகம் எனவும், ஆகம வழிப்படுதலைச் சைவம் எனவுங் கொண்டு சைவ சமயத்தை வைதீகச் சைவம் என்று பெரியோர்கள் போற்றுவர். உலகாயத மதத்தினரின் தாரகக் கொள்கையானது வாழ்க்கை வாழ்வதற்கே என்பதும் புலன் இன்பமே வாழ்க்கைக் குறிக்கோள் என்பதுமாகும். இறைவனை நா தழும்பேறும் படி தூற்றும் மனிதர்களும் சமயம் மற்றும் மதம் தொடர்பான காழ்ப்புணர்ச்சியும் மண்டிக்கிடந்தக் காலக்கட்டத்தில் வாழ்ந்தவர் தாயுமானவர் என்பதை இப்பெருமகனாரின் பாடல்கள் வழி அறியலாம். ஏதேனும் ஒன்றில் பயன்பாடும் நற்பயனும் கிடைக்கப்பெறுகிறது என்றால் அதனைப் பற்றி; அதனில் நிலைபெற்று இருப்பதும் மனிதனின் இயல்பாகும். இதன் வழி தாயுமானவர் சைவசித்தாந்தத்தினை ஏற்றுப் பெற்ற நன்மைகளையும் உலகாயுத மதத்தினைத் தவிர்ப்பதற்கானக் காரணங்களையும் **தாயுமானவரின் சைவசித்தாந்த ஏற்பும் உலகாயத மறுப்பும்** என்ற தலைப்பின் வழி ஆய்வதாக அமைகின்றது.

**ஆய்வு அனுகுமுறை**

இவ்வாய்வின் கருத்துக்களை விளக்குமிடத்து விளக்கமுறை அணுகுமுறையும், உலகாயதம் முதல் சைவசித்தாந்தம் வரை கருத்துக்களை ஒப்பிட்டுக் கூறுமிடத்து ஒப்பியல் அணுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

**தாயுமானவர் சிறப்புகள்**

பதினெட்டாம் நூற்றாண்டிற்கு பின் வாழ்ந்த தாயுமானவர் கேடிலியப்பர் கெசவல்லி அம்மையாருக்கு திருமகனாகப் பிறந்தவர். தன்னுடைய இளவயதிலேயே வடமொழி, சமஸ்கிருதம், சோதிடம் போன்ற துறைகளில் ஆர்வம் கொண்டவராவர். சமயம் சார்நத ஈடுபாடு கொண்ட தாயுமானவர் சைவ சிறப்பினைச் பறைசாற்றுகின்ற நூல்களான தேவரம், திருவாசகம், திருமந்திரம், திருப்புகழ் போன்றவற்றை பாங்குற பயின்றுள்ளார் என்பதனை இவர்தம் பாடல்கள் வழி அறிய முடிகின்றது. பிற உயிர்களையும் தம்முயிர் போல எண்ணி பாடல் புனைந்த பெருந்தகையோன் தாயுமான சுவாமிகளாவர்.

- இல்லற வாழ்வின் இனிமையில் கசந்து துறவற வாழ்வின் மூலம் தவத்திலே சிவனைக் கண்ட ஞானியான தாயுமானவரின் பாடல்கள் தமிழ்மொழியின் உபநிடதம் என்று அழைக்கப்படுகின்றது.
- தாயுமானவரது பாடல்களை உற்று உணர்ந்து ஆழமாக ஓதுபவர்களின் உள்ளமும் உயிரும் உருகுவதோடு மனம் அமைதி பெறும் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை.
- இவர்தம் பாடல்களில் வடமொழி புலமை மிகுந்திருப்பினும் சொற்சுவையிலோ பொருட்சுவையிலோ எவ்வித குறைபாட்டையும் காணமுடியாது என்ற சிறப்பிற்குரியதாக உள்ளன.
- சைவ சமயத்தில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்ட இப்பெருமானின் பாடல்கள் அனைத்திலும் தான் கூறவந்த கருத்துக்களைக் கட்டளையிட்டும், எச்சரித்தும், தூற்றியும், சினம் கொண்டும் பதிவுசெய்யாமல் தன்மீதே ஏற்றி நொந்து பாடல்களை யாத்திருப்பது நோக்குதற்குரியதாகும்;.
- வாழ்வியல், தத்துவம், யோகம், ஞானம், மந்திர தந்திரங்களில் வித்தகரான திருமூலரின் மரபில் வந்தவன் என்று கூறி தாயுமானவர் பெருமிதம் கொள்கிறார்.

நவீன காலத்தின் முன்னோடியாக விளங்கிய மகாகவி பாரதியார் கம்பனையும், வள்ளுவனையும், இளங்கோவடிகளையும் புகழ்ந்த தன் திருவாயினால் தாயுமானப் பெருமானையும் போற்றிச் சிறப்பித்து அகம் மகிழ்கிறார்.

***என்றும் இருக்க உளம்கொண்டாய் இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்***

***இன்றும் இருத்தல் செய்கின்றாய்;; இறவாய் தமிழோடு இருப்பாய் நீ!***

***ஒன்று பொருள் அஃது இன்பம் என உணர்ந்தாய் தாயுமானவனே***

***நின்ற பரத்து மாத்திரமோ நில்லா இகத்தும் நிற்பாய் நீ!***[1]

என்ற இச்சிறப்புமிகு பாடலடிகளின் மூலம் தாயுமானவரின் பாடல்களில் அமைந்துள்ள. வாழ்வியல் நோக்கும், தத்துவச் செழுமையும் மகாகவியை முழுமையாக பாதித்துள்ளதை அறிய முடிகின்றது. மேலும் தாயுமானவரைப் பற்றி அறியாத கல்வியாளர்களைப் பாரதியார்,

***'தாயுமானவரைப் போன்ற ஞானி ஒருவர் இங்கிலாந்திலே இருந்திருப்பாரானால், அவரைப் பற்றி அறியாத பாடசாலை மாணாக்கன் இருக்கமாட்டான். அவரது இனிய இசை நிரம்பிய அமிருத கவிதைகளை கற்றேனும், அவரது சரித்திரம் முதலியவற்றைக் கேட்டேனும் அறியாத ஆயிரக் கணக்கான மூடர்கள் தம்மை கல்விமான்களென்றும், பட்டதாரிகளென்றும் கூறிக்கொண்டு திரிகிறார்கள்'***[2] *என்று வருந்தி தீர்க்கின்றார்.*

***சைவசித்தாந்தம் உலகாயதம் இடையேயான உறழ்வுகள்***

| ***தத்துவங்கள்;*** | ***ஆசிரியர்*** | ***அளவைகள்*** | ***இறைவன்;*** | ***ஆன்மா*** | *முக்தி* | ***ஐம்பூதங்கள்*** | ***வினைக்கோட்பாடு*** |
|---|---|---|---|---|---|---|---|
| ***சைவசித்தாந்தம்;*** | ***பலர்;*** | ***காட்சி, காண்டல், உரை*** | ***ஏற்கும்;*** | ***உண்டு (ஒன்று)*** | ***பேரின்பம்*** | ***ஏற்கும்;*** | ***நம்பிக்கை உண்டு*** |
| ***உலகாயதம்;*** | ***பிரகஸ்பதி முனிவர்;*** | ***காட்சி*** | ***ஏற்காது*** | ***இல்லை*** | ***சிற்றின்பம்;*** | ***ஆகாயத்தை தவிர்த்தது*** | ***நம்பிக்கை இன்மை*** |

***உலகாயதம் - வேறுபெயர்***

*இந்தியத் தத்தவங்களிலேயே மிகவும் பழமையானது உலகாயதத் தத்துவமாகும். இத்தத்துவமானது சார்வாகம், பிரகஸ்பதீபம், விதண்டாவாதம், பூதவாதம் எனப் பல்வகைப் பெயர்களைத் தன்னகத்தே கொண்;டதாகும். இம்மதக் கொள்கைகளைப் பின்பற்றுவோரை உலகாயதர், சார்வாகர், காட்சி வாதர், நிரீசுரவாதர், பூதவாதி, நாத்திகர் என்ற பெயர்களில் அழைப்பர்.* ***'உண்டு, குடித்துக் களிப்பில் ஆழ்பவன்' அல்லது தன் சொறக்களைத் தானே விழுங்குபவன்;' அல்லது 'நன்னெறிக் கருத்துகளை உண்டு ஏப்பதிடுபவன்'***[3] *எனப் பல பொருள்களில் சாருவாகன் என்னும் சொல் வழங்கப்படுகின்றது. அதாவது உண்டு காலம் கழிப்பவர்களைச் சாருவாகர் என்பர்.*

***உலகாயதர்களின் வாதத் திறமைகள்***

*உலகாயதர்கள் தாங்கள் கொண்ட கொள்கையை நெறிபடுத்தும் நோக்கில்; மட்டும் கருத்துக்களைக் கூறாமல் பிறமதக் கொள்கைகளைக் கடுமையாக சாடியதால,; தத்துவ ஞானிகளின் இடித்துரைத்தலுக்கு இம்மதம் இரையானது. சாங்கியம், யோகம், மீமாமசம், வைசேடிகம், நியாயம், சைவசித்தாந்தம் போன்ற மதங்களின் இறைக்கொள்கை, ஆன்மா குறித்த கொள்கை, வினைக் கொள்கை, முக்தி கொள்கை போன்றவற்றை மறுத்துரைக்கும் நோக்கத்தில் உலகாயதர்கள் எழுப்பும் வினாக்கள் சிந்தனைக்கும் வியப்பிற்கும் உரியதாக அமைகின்றன. இக்கருத்தினை* ***மனுதர்ம சாஸ்திரத்துக்கு உரை வகுத்த மேதழகி என்பார் சார்வாகத்தினரின் தர்க்கத் திறமையினைப் பாராட்டியுள்ளார்***[4] *என்பதனை அறிய முடிகின்றது.*

*இறைவன் உள்ளான் என எண்ணி தவங்களையும், விரதங்களையும் மேற்கொள்ளுபவர்களை வீணாக காலங்கடத்துவோர் என்று சாடும் கொள்கையைக் கொண்டோர்*

*உலகாயத்தினர். இறைவன் உலகத்தை படைக்கவில்லை எனில் கன்மத்தை எவ்வாறு படைத்திருக்க முடியும் என்பதே இவர்களின் வாதமாகும். ஒரு கையில் ஐந்து விரல்களும் தாம் முற்பிறப்பில் என்ன கன்மங்கள் செய்து இங்ஙனம் தம்முள் நீண்டும் குறுகியும் தோன்றுகின்றன என்பதே உலகாயதரின் கேள்வியாகும். இயற்கையிற் காணும் சகல வேருபாடுகளும், நல்லோர் துயருதலும், அல்லோர் இன்பம் நுகரலும் இயற்கையின் சுபாவம் என்பதே அன்னோர் கருத்தாகும்.*

***உயிர் குறித்த கொள்கையானது, பாக்கு, வெற்றிலை, சுண்ணாம்பு மூன்றும் சேரும்போது ஒரு சிவப்பு நிறம் உண்டாவது போல், பஞ்ச பூதங்களின் சோர்க்கையினால் நமது உடல் உற்பத்தியாகும் பொழுது அச்சேர்க்கையினால் விளைவாக ஒரு சக்தியும் உண்டாகி, உடல் அழியும் போது அச்சக்தியும் அழிந்து விடுகின்றது***[5] *என்பது இம்மதத்தின் ஆன்மா குறித்த முடிவாகும்.*

- *இவ்வுலகமே உண்மை. தனியாக சுவர்க்க நரகங்கள் இல்லை. இவ்வுலக இன்பமே சுவர்க்கம். இவ்வுலகத் துன்பமே நரகம். சிற்றின்பமே முக்தி. வாழ்க்கைப் பயணத்தில் நம்மை மகிழ்விக்கின்ற அனைத்துமே முக்திக்கு இணையாகும் என்பதே இம்மதத்தினரின் முக்தி கொள்கையாகும்.*
- ***பூலோகத்தில் கொடுக்கும் பிண்டம் சுவர்க்கத்திலிருப்பவர்களைத் திருப்திப்படுத்துமானால் மாளிகையின் மீதிருக்கின்றவர்களை நினைத்துச் சமையல் கட்டில் ஏன் உணவு தருவதில்லை***[6].
- ***இன்று கைவசப்படும் புறா, நாளை கிடைக்கக் கூடிய மயிலைவிடச் சிறந்தது. அங்ஙனமே, இன்று கிடைக்கும் செப்புக்காசு நாளை கிடைக்கக் கூடும் என்று ஐயப்படும் பொற்காசினை விடச் சிறந்தது என்னும் கொள்கைகளைத் தன்னகத்தே கொண்டவர்கள் உலகாயதர்கள்*** [7]**.**

*மேற்கண்ட கூற்றுக்கள் என்னும் கேள்விக் கணைகளால் திணற வைப்பதில் உலகாயதர்கள் கைத்தேர்ந்தவர்கள்; என்பதை அறிய முடிகின்றது. இக்கால நடைமுறைக்கு ஏற்றாற்போல் கூறுவோமானால் பக்தியையோ அணங்கையோ(பேயையோ) முன்வைத்து எடுக்கும் திரைப்படத்தில் கொல்லப்படும் உயிர்(ஆன்மா) மீண்டும் பழி வாங்கும் என்றால் குத்துச் சண்டை தொடர்பான திரைப்படங்களில் இறக்கும் ஆன்மாவானது பழி வாங்க வராதது ஏன் என்பதே இவர்களின் மிடுக்குநடை வினாவாகும். குத்துத் சண்டையில் வரும் ஆன்மாவானது இரக்க குணத்தை பணத்திற்கா/hக விற்று கொலைத் தொழில் புரிந்து நின்றதை உலகாயதரின் கண்களுக்குப் பலப்படவில்லை.*

***தாயுமாளவரின் சைவசித்தாந்தக் கொள்கை***

சைவசித்தாந்தத்தின்படி இறைவன் ஆதியும் அந்தமும் இல்லாதவன். உலகத்தினையும், ஐம்பூதங்களையும், முக்தியையும் இறைவனே வழங்கும் தகுதியுடையவன். சைவர்கள் புனித நூலாக ஏற்றுக் கொள்ளப்படும் வேதத்தினையும் ஆகமத்தினையும் இறைவனே அருளினான் என்றும் இறைவனின் துணையின்றி எந்த ஒரு அணுவும் அசையாது என்றும் தாயுமானவர்,

**அவனன்றி ஓர்அனுவும் அசையாது** ***(தாயு : 89 : 1 )***

இப்பாடலடி வழி விளக்குகின்றார். உலகாயதரின் முதல் கொள்கையே இறைவனால் அருளப்படும் முக்தியானது தங்களுக்கு வேண்டாம் என்பமேதே. முக்தியை மறுக்கும் மனிதர்களை **முக்தி நெறி அறியாத மூர்க்கரோடும் முயல்வேனை**[8] என்பார் மாணிக்கவாசகர்.

தாயுமானவர் போற்றிச் சிறப்பிக்கின்ற சைவசித்தாந்தத்தின் இரத்தினச் சுருக்கக் கொள்கையே முக்தியைப் பெற்றுத் தருவதாகும். இதனை,

**சித்தாந்த முக்திமுதலே** ***(தாயு : 26 : 14)***

என்ற பாடலடி கூறுகின்றது. மனிதனுக்கு முக்தியினைத் தருவதற்கு முதலில் அவனைத் தயார்படுத்தும் நோக்கத்தோடு பெருநெறியினை உய்த்துணர வைக்கின்றது. முக்தி என்பது பெருநெறியாகும். புலன்களால் நுகரப்படும் இன்பம் சிற்றின்பம் என்பதை பசுவாகிய உயிர்களுக்கு உணர்த்தி பாசத்தின் மீதுள்ள பற்றுகளை அறுக்கச்செய்து பதியினை அடைய வைப்பதே சைவசித்தாந்தத்தின் உயர்நெறியாகும். இப்பெரு நெறியினை எளிதாகப் பின்பற்றுவதற்கு சைவ சமயம் விளக்குகின்ற தத்துவக் கருத்துக்கள் பேருதவி புரிகின்றன. பொறி புலன்களின் வழி இந்திரிய ஒழுக்கத்தையும், மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் கரண ஒழுக்கத்தையும், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்னும் பேதங்களை உணர்விக்கும் சீவ ஒழுக்கத்தையும், அனைத்து உயிர்களையும் தன் உயிர் என என்னும் ஆன்ம ஒழுக்கத்தையும் பயிற்றுவிக்கும் பயிற்சியகமே சைவசித்தாந்தமாகும் என்று தாயுமானவர் பட்டியலிடுகின்றார்.

**ஒரு மதம் ஆன்மாவிற்கென்று வகுத்துள்ள இலக்கணத்தைக் கொண்டு அம்மதத்தின் முக்திக் கொள்கையை நிறுவிடலாம்**[9] என்பர். உலகாயத மதத்தினரால் ஆன்மாவையும் ஏற்காமல் இறைவனையும் உணராமல் இருக்கும் இம்மதத்தினரின் முடிவு வெளிப்படையாகத் தெரிகின்றது. கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று வாழும் உலகாயத மதத்தினைப் பின்பற்றுவதன் மூலமாக மனிதனுக்கு நிலையில்லாத பொருட்களின் மீது மோகம் ஏற்பட்டு தன்னடக்கம் குன்றி, சுயநலம் மிகுந்து, பொறுமை மலிந்து இன்னல்களுக்கு இரையாகின்றான். இறைவன் ஒருவன் இல்லை என்னும் கொள்கையின் விளைவாக பிற உயிர்களிடத்தே அன்பு செய்யும் பக்குவத்தை இழந்து தனக்கும் பிறர்க்கும் உண்மையில்லாமல் வாழும் வழியினை ஏற்படுத்திக்கொள்கிறான். பிற மதக் கொள்கைகளை நன்கு ஆராயாமல் மேற்போக்காக ஆய்வதன் மூலம் ஆங்காரத்தை

*வளர்த்து வினைகள் பல புரிந்து பிறவிப் பிணி என்னும் சுழற்சியில் அகப்பட்டுக் கொள்கிறான் என்னும் நிதானத்தை தாயுமானவர் பாடல்கள் உணர்த்தி பதிவுசெய்துள்ளன. ஐம்பூதங்களால் உலகம் இயங்கவில்லை என்னும் சிந்தனைப் போக்கை சாடுவதை,*

**வான்கெடுத்துத் தேடும் மதிகேடர் போலஎமை**

**நான்கெடுத்துத் தேடாமல் நன்குஅளிவது எந்நாளோ *(தாயு : 1176)***

*என்ற பாடலடிகள் விளக்குகின்றன. உலகாயதரின் கொள்கையினைப் பின்பற்றி நின்றமையால் தனக்கு இறை அருளும் முக்தியும் கிடைப்பதற்கு கால தாமதமானது என்பதை,*

**முருந்துஇள நகையார் பார முலைமுகம் தழுவிச், செவ்வாய்**

**விருந்துஅமிர்து எனஅ ருத்தி, வெறியாட்டுக்கு ஆளாய், நாளும்**

**இருந்தலோ காய தப்பேர் இனத்தனாய் இருந்த ஏழை**

**பொருந்தவும் கதிமேல் உண்டோ? பூரணா னந்த வாழ்வே *(தாயு : 572)***

*என்னும் பாடல் தெளிவுப்படுத்துகின்றது. இப்பாடலின் கருத்தாக மாதரின் மேலுள்ள மயக்கமே முக்தி என்னும் உலகாயதரின் கொள்கையை மறுக்கும் விதமாக சைவ சித்தாந்தத்தின் கொள்கை அமைந்துள்ளது. மாதர் இன்பம் சிற்றின்பம் என்ற பேருண்மையை உலகாயத மதம் ஏற்பதில்லை. மாதர் இன்பத்தில் மயங்கி விந்து விரையத்தின் மூலம் உடல் ஆற்றலை இழந்து உயிரின் ஆயுட்காலமும் குறைகின்றது என்கின்ற அறிவியல் உண்மையை முன்வைக்கின்றது சைவசித்தாந்தம்.*

***சான்றோர்களின் பார்வையில் உலகாயதம்***

*சமயச் சான்றோர்களின் சிந்தனைக்கும், சாடலுக்கும், பழிப்புக்கும், தாக்குதலுக்கும் உள்ளான மதங்களில் மிகமுக்கியமான மதமாக உலகாயத மதமுள்ளது. சைவசித்தாந்தாந்தக் கருத்துக்களைக் கூற வந்தச் சான்றோர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் உலகாயதத்தை மறுதலை செய்துள்ளது குறிப்பிடதக்கதாகும். உலகாயதம் என்ற சொல்லாட்சியை நேரடியாக பயன்படுத்தி இம்மதத்தை மறுத்துள்ளனர்,*

***மாணிக்கவாசகர்***

*மாணிக்கவாசகப் பெருமான் திருவாசகத்தில் நாத்திக மதமான உலகாயதத்தை, .*

**உலகாய தமெனும் ஒண்டிற்றபாம்பின்**

**கலா பேதத்த கடுவிடமெய்தி**[10]

*என்ற பாடலடிகள் வழி சாடுகின்றார். விளக்குகின்றன . உலகாயதர்களின் கொள்கையைக் கொடிய பாம்பின் விடத்திற்கு ஒப்பெனக் கூறிப் பதிவுசெய்துள்ளார்.*

***திருமூலநாயனார்***

*சைவசித்தாந்தத்தினைத் திறம்பட விளக்கும் மூத்த தத்துவஞானியான திருமூலப் பெருமான் திருமந்திரத்தில் வேதாந்திகள், சைவர்கள், வைணவர்கள் என ஒவ்வொரு பிரிவினருக்கும் தத்துவங்களைத் தனித்தனியாக விளக்க முற்படும் போது உலகாயதம் சாங்கியம் போன்ற மதங்களுக்கான தத்துவக் கொள்கைகளை மாயாவதிகள் என்ற பெயரில் வழ்ங்கியுள்ளது குறிப்பிடத்தக்கதாகும். இக்கருத்தினை ,*

**ஆகின்ற தொண்ணூற்றோடு ஆறும் பொதுஎன்பர்**

**ஆகின்ற ஆறாறு அருஞ்சைவர் தத்துவம்**

**ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்கு**

**ஆகின்ற நாலாறு ஐயைந்தும் மாயாவாதிக்கே**[11]

*என்கின்ற பாடல் வழி விளக்குகின்றார்.*

***அருணந்தி சிவாச்சாரியார்***

*சைவசித்தாந்த கோட்பாடுகளைச் செவ்வனே விளக்கியமைந்த பெருமைக்குரியவர் அருணந்தி சிவாச்சாரியார் ஆவார். இவர் எழுதிய சிவஞான சித்தியார் என்னும் நூலானது சுபக்கம் பரபக்கம் என்னும் இரு பிரிவினைத் தன்னகத்தே கொண்டதாகும்.* **சிவத்திற்கு மேல் தெய்வமில்லை சித்திக்கு மேல் நூல் இல்லை** *என்னும் முதுமொழி இந்நூலின் பெருமையைப்; பறைசாற்றுகின்றது. அருணந்தி சிவனாரின் பரபக்கம் நூலில் உலகாயதம், சமணம், பௌத்தம், மீமாம்சம், ஆசிவகம் போன்ற மதங்களைச் சைவ சித்தாந்தத்துடன் பொருத்தி ஆராய்ந்துள்ளார். உலகாயதனின் இயல்புகள், குணங்கள், கொள்கைகள் என பல்நோக்கு பார்வையில் கருத்துக்களைக் கோர்த்துள்ளப் பாங்கு ஏற்புடையதாகும். பெண் மோகமே மெய் என அனுபவிக்கும் உலகாயதனின் கொள்கையை,*

**இந்திர புரோகித னியம்புமொரு நூலின்**

**தந்திர மெனாதறிவி னோடருளி லாமல்**

**சந்தணை புயத்துமண மாலைக டயங்க**

**உந்தியுல கத்திலுல காயத னுரைப்பான்**[12]

*என்ற பாடல் விளக்கியமைகின்றது.*

**நிறைவாக**

*உலகாயத மதத்தில் தோய்ந்து பின்பற்றி வெற்;றிக் கொண்ட ஞானிகளின் எண்ணிக்கையை கொண்டே இம்மதத்தின் பயன்பாடுகளை அறியலாம். கடவுள் இல்லாமல் மனிதன் இயங்கலாம். முக்தி ஆன்மாவிற்குத் தெவைப்படாமலும் போகலாம். ஆனால் விலங்குகளிடமிருந்து மனிதனை வேறுபடுத்திக் காட்டுவது ஒழுகலாறுகளே என்பதை யாராலும் மறுக்க முடியாது. உலகாயத மதத்தின் நோக்கம் பொருளீட்டுதலும் இன்பம் துய்த்தலும் மட்டுமேயாகும். சைவசித்தாந்த நன்னெறி என்பது அறவழியில் பொருளீட்டி இன்பம் அடைந்து அதன் வழி வீடுபேறு அடைவதே என்னும் உயர்ந்த குறிக்கோளைத் தன்னகத்தே கொண்டதாகும். சைவசித்தாந்தத்தில் நின்று வாழ்வினைச் செம்மை செய்து மக்கள் மனதில் நீங்கா இடம் பெற்ற சான்றோர்களாக தேவார மூவர், மாணிக்கவாசகர், திருமூலர், அருணகிரிநாதர், இராமலிங்க வல்லளார், சிவவாக்கியார் என்று பட்டியலை நீட்டித்துக் கொண்டே செல்லலாம். இப்பெருமான்களின் வாழ்விற்கு இணங்க சாதாரண மனிதர்களால் வாழ முடியாவிடினும் தன்னால் பிறருக்குத் தீங்கு ஏற்படாமல் இருக்கும் ஞானத்தை சைவசித்தாந்தம் நல்குகின்றது என்றால் அது மிகையாகாது.*

**அடிக்குறிப்புகள்**

*1. பாரதியார் கவிதைகள், தாயுமானவர் வாழ்த்து, பா : 256*

*2. பாரதி புதையல் பாகம் 1, ரா. அ. பத்மநாமன், ப : 77*

*3. இந்தியத் தத்துவ மரபு சில பார்வைகள், வெ. கோவிந்தசாமி (ப.ஆ), ப : 46*

*4. மேலது ப : 47)*

*5. இந்தியத் தத்துவ ஞானம், லஷ்மணன்.கி, ப : 265*

*6. இந்தியத் தத்துவ மரபு சில பார்வைகள், வெ.கோவிந்தசாமி, ப : 47*

*7. இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி 1, ப : 98*

*8. மாணிக்கவாசகர், திருவாசகம், அச்சோப்பதிகம்.*

*9. லஷ்மணன்.கி, இந்திய தத்துவ ஞானம், ப : 265*

*10. மாணிக்கவாசகர், திருவாசகம், போற்றித்திருவகவல்*

*11. திருமந்திரம், பா : 2179*

*12. சிவஞான சித்தியார், பரபக்கம், செய்யுள் : 11*

**நெறித்துணை நூல்கள்**

1. புலவர் வீ. சிவஞானம் (உ.ஆ) (2016), தாயுமானவர் சுவாமி பாடல்கள் மூலமும் உரையும், விஜயா பதிப்பகம், 20, ராஜ வீதி, கோயம்புத்தூர் - 01.

2. வெ.கோவிந்தசாமி (ப.ஆ) (2012), மார்க்சீய ஒளிக் கட்டுரைகள் 3 இத்தியத் தத்துவ மரபு சில பார்வைகள், நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்., 41டீ சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட், அம்பத்தூர், சென்னை – 98

3. டாக்டர் சோ.ந.கந்தசாமி (2003), இந்தியத் தத்துவக் களஞ்சியம், தொகுதி 1, மெய்யப்பன் பதிப்பகம், 53 புதுத்தெரு, சிதம்பரம் - 01

4. பாரதியார் கவிதைகள் 2016(கையடக்கப் பதிப்பு), பூம்புகார் பதிப்பகம், 127, பிரகாசம் சாலை, சென்னை – 18.

5. பாரதி புதையல் முதல் பாகம்(1958), ரா.அ. பத்மநாபன் (ப.ஆ), அமுத நிலையம் பிரைவேட் லிமிடெட், சென்னை - 18

6. ஞா.மாணிக்கவாசகம் (உ. ஆ) 2016, திருமந்திரம் மூலமும் விளக்க உரையும், உமாபதிப்பகம், சென்னை - 01.

7. இந்திய தத்துவ ஞானம் (1960), லஷ்மணன்.கி, பழனியப்பா பதிப்பகம்.

8. சிவஞான சித்தியார் பரபக்கம்(மெய்கண்ட சாத்திரம்), இராச. வசந்தகுமார், பன்னிரு திருமுறை ஆய்வு மையம், கோவை - 21